



# குருளை சாரணர் நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை சாரணர் சங்கம்
குருளை சாரணர் மற்றும் நிகழ்ச்சிப் பிரிவின் வெளியீடு

# குருளை சாரணர் நிகழ்ச்சித் திட்டம்

# පෝතක බාලදක්ෂ වැඩ සටහන

# CUB SCOUT PROGRAMME



SRI LANKA SCOUT ASSOCIATION
65/9, SIR CHITTAMPALAM A. GARDINER MAWATHA
COLOMBO 02.

முதற் பதிப்பு 1987
இரண்டாம் பதிப்பு 1996
மூன்றாம் பதிப்பு 2002
நான்காம் பதிப்பு 2006
மீள் பதிப்பு 2019
மீள் பதிப்பு 2021

வெளியீடு : இலங்கை சாரணர் சங்கம்

*SRI LANKA SCOUT ASSOCIATION*
*65/9, SIR CHITTAMPALAM A. GARDINER MAWATHA*
*COLOMBO 02.*

*Cover page & graphic design*
*H.Chamara Sandaruwan Kaldera*
*Asst. Headquarters Commissioner*

## පෝතක බාලදක්ෂ පොරොන්දුව
## குருளை சாரணர் வாக்குறுதி
## CUB SCOUT PROMISE

මාගේ ආගම හා රට කෙරෙහි යුතුකම් ඉටු කිරීමට ද,
පෝතක බාලදක්ෂ නීතියට කීකරු වීමට ද,
දිනපතා යහපත් වැඩක් කිරීමට ද,
මාගේ සම්පූර්ණ උත්සාහය යෙදීමට පොරොන්දු වෙමි.

என்னால் கூடுமானவரை எனது சமயத்திற்கும்,
தேசத்திற்கும் என் கடமையை செய்வேன் என்றும்,
குருளை சாரணர் விதிகளுக்குப் பணிந்து
நடப்பேனென்றும், தினமும் ஒரு நற்பணி
புரிவேனென்றும் நான் வாக்குறுதி அளிக்கின்றேன்.

I PROMISE TO DO MY BEST,
TO DO MY DUTY TO MY RELIGION AND COUNTRY,
TO OBEY THE CUB SCOUT LOW, AND
TO DO A GOOD DEED EVERY DAY.

## CUB SCOUT LAW

**1**

පෝතක බාලදක්ෂයා ආකේලාට කීකරු වෙයි
குருளை சாரணர் அகேலாவிற்கு கீழ்ப்படிந்து நடப்பார்
THE CUB SCOUT OBEYS AKELA

**2**

පෝතක බාලදක්ෂයා ප්‍රයෝජනවත් අයෙක් වෙයි
குருளை சாரணர் தன்னை உபயோகமுள்ளவராக்குவார்
THE CUB SCOUT MAKES HIMSELF USEFUL

**3**

පෝතක බාලදක්ෂයා වඩාත් හොඳින් කිරීමට යත්න දරයි
குருளை சாரணர் திறம்படச் செயலாற்ற முயற்சிப்பார்
THE CUB SCOUT KEEPS TRYING TO DO BETTER

| இல | கல்வி நோக்கங்கள் | இலக்குகள் |
|---|---|---|
| 01. | உடல்சார்ந்த | எளிமை, மகிழ்ச்சி செயற்பாடுகள் மூலம் நல்ல ஆரோக்கிய பழக்கங்களை வளர்த்துக் கொள்ளுதல். |
| 02. | அறிவுசார்ந்த | எளிமையான மற்றும் சுவாரஸ்யமான செயற்பா-டுகள் மூலம் எதிர்காலத்தில் பயனுள்ள பல்வேறு துறைகளில் ஆர்வத்தைத் தூண்டுதல். |
| 03. | உணர்வுசார்ந்த | எளிமை, சுவாரஸ்ய செயற்பாடுகள் மூலம் மற்றவர்களுடன் நெருங்கிய, மரியாதைக்குரிய உறவைப் பேணுவதற்கு பயிற்றுவித்தல். |
| 04. | சமூகம் சார்ந்த | எளிய, சுவாரஸ்ய செயற்பாடுகள் மூலம் சமூக நெறிமுறைகள் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல். |
| 05. | ஆன்மீகம் சார்ந்த | ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மூலம் பல்வேறு மதங்கள் பற்றிய அடிப்படை அறிவை வளர்த்துக் கொள்ளுதல். |
| 06. | கலாசாரம் சார்ந்த | எளிய மற்றும் சுவாரஸ்யமான செயற்பாடுகள் மூலம் குருளைகள் தொடர்ந்து வளரும் கலாசார புரிதலை உருவாக்குதல். |

# குருளை சாரணர் முன்னேற்றத் திட்டம்

## தங்கத் தாரகை

22 தேவைகள்
3 கட்டாய தகுதிகாண் சின்னங்கள்

## வெள்ளித் தாரகை

24 தேவைகள்
02 கட்டாய தகுதிகாண் சின்னங்கள்


## வெண்கலத் தாரகை

23 தேவைகள்
01 கட்டாய தகுதிகாண் சின்னம்


## அங்கத்தவச் சின்னம்

10 தேவைகள்

# குருளை சாரணர் சீருடை (ஆண்)



# குருளை சாரணர் சீருடை (பெண்)



## குருளை சாரணர் கீதம்

முழு லொவம அப்பே- மௌபிமத் அப்பே//
அப்பி வெமு எஹி நாயக்கயோ
மல் சுவந்த திதீ குணருவின் செதீ
அப்பி வெமு ஹொந்த போத்தகயோ...

செம விரிய கரம் - இட்டு கரனு லிஸின்
யுத்துகம் ரட்ட தெயட்ட அப்பே
ரெல எக்கத்து வெமின் பியநகம துட்டின்
பீ பீ நம ரெந்துனு மகே

முழு உலகும் எமதே - தாய் நாடும் எமதே//
ஆகிடுவோம் அதன் தலைவர்கள்
மலர் வாசமுடன் நற்குணங்களுடன்
ஆகிடுவோம் இளம் சாரணர்கள்

அத போத்தகயோ ஹெட்ட நாயக்கயோ
சுது பியும் விலச பிபெனா
வெமு தாயக்கயோ ரட்ட கொட நகனா
சமகிய பலயய் வட்டினா...



# குருளைச் சாரணர் அங்கத்துவ சின்னம்

## குருளைச் சாரணர் அங்கத்துவ சின்னத்திற்கான தகைமைகள் 7 வயது முதல் 11 வயது வரை

1. **குருளைச் சாரணர் வாக்குறுதி**
   குருளைச் சாரணர் வாக்குறுதியை அறிந்திருத்தல்.

2. **குருளைச் சாரணர் விதி**
   குருளைச் சாரணர் விதியை அறிந்திருத்தல்

3. **மகுட வாக்கியம்**
   குருளைச் சாரணர் மகுடவாக்கியத்தை கூற முடியுமானதாக இருத்தல்

4. **துடிநிலை**
   நிமிர்ந்து நிற்கவும் இலகுவாக நிற்கவும் அறிந்திருத்தல்

5. **வணக்கமுறை கைகொடுத்தல்**
   குருளைச் சாரணர் வணக்க முறை மற்றும் இடது கைகொடுத்தலை சரியாக தெரிந்திருத்தல்

6. **கம்பீர கோஷம்**
   கம்பீர கோஷம் செய்வதற்கு அறிந்திருத்தல்

7. **வனக்கதை**
   மௌக்லி மந்தையில் இணையும் வரை உள்ள வனக்கதையை அறிந்திருத்தல்.

8. **நற்பணி**
   தான் செய்த நற்பணியொன்றை ஆக்கேலாவுக்கு முன்வைத்தல்.

9. **தீங்கிலிருந்து பாதுகாப்பு**
   இந்தப் புத்தகத்தின் கடைசிப் பகுதியில் உள்ள தீங்கிலிருந்து பாதுகாப்பு அட்டவணையில் அங்கத்துவப் பிரிவு தேவைகளை நிறைவு செய்யவும்.

10. **குருளை மந்தையில் இணைந்த பின் 2 மாத சேவை**
    குருளைச் சாரண் ஆக்கேலாவினால் இத்தகைமைகளை குருளைச் சாரணர் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தி அங்கத்துவ சின்னத்திற்காக பரிந்துரைப்பார்.

# வெண்கலத் தாரகை விருது

## வெண்கலத் தாரகைக்கான தகைமைகள்
## 07 வயது 2 மாதங்கள் முதல் 11 வயது வரை

1. **உண்டியலில் பணம் சேகரித்தல்**
   அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து வெண்கலத் தாரகையை பெற்றுக் கொள்ளும் வரை உரிய முறையில் உண்டியலொன்றில் பணம் சேகரித்தல்.

2. **பல்வேறு சமயங்கள் பற்றிய அறிவு**
   இலங்கையிலுள்ள பிரதான நான்கு சமயங்களின் பெயர்கள், அவற்றின் குறியீடுகள் மற்றும் பிரதான சமய ஸ்தலங்களைப் பெயரிடக் கூடியவராக இருத்தல்.

3. **மகிழ்ச்சிகரமான சேவை**
   மந்தையுடன் இலகுவான, மகிழ்ச்சிகரமான சேவையொன்றில் பங்குபற்றல். உ+ம்- வகுப்பறைகளை சுத்தம் செய்தல், நூலகத்திற்குப் புத்தகங்களை நன்கொடையாக வழங்குதல், பூ மரங்கள் வளர்த்தல்

4. **நேர்க்கட்டு**
   நேர் கட்டை சரியாக கட்டுதல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் பயன்களை கற்றுக் கொள்ளல்.

5. **கடிகாரத்தை பார்த்து நேரத்தை கூறுதல்**
   காகிதம் அல்லது கார்ட்போட் பெட்டியில் மாதிரி கடிகாரமொன்றை தயாரித்து அதில் குறைந்தபட்சம் 4 சந்தர்ப்பங்களில் நேரத்தை சரியாக கூறக் கூடியவராக இருத்தல்.

6. **காலணிகளை சுத்தமாக வைத்திருத்தல்**
   காலணிகளை சுத்தமாக வைத்துக் கொள்ளல் (முடியுமாயின் மினுக்கம் செய்தல்)

7. **கழுத்தணி**
   கழுத்தணியை உரிய முறையில் அணிதல் மற்றும் அதை சரியாக மடித்து வைப்பதற்கு அறிந்திருத்தல்.

8. **சிறிய கைவினை அல்லது சித்திரமொன்றை நிர்மாணித்தல்**
   சிறிய கைவினையொன்று அல்லது சித்திரமொன்றை நிர்மாணித்தல். (பின்னர் அவற்றை வைத்து கண்காட்சியொன்றை நடாத்த முடியும்.)

**9. தேசிய கீதம்**

தேசிய கீதத்தை பாடுதல் மற்றும் அவ்வாறு பாடும் போது உரிய முறையில் நிற்பதற்கு அறிந்திருத்தல்.

**10. அவதானித்தல் - பூக்கள் மற்றும் பறவைகள்**

தனது பிரதேசத்தில் உள்ள வெவ்வேறு விதமான 03 பூக்கள் மற்றும் 03 பறவைகளை அவதானித்து அது தொடர்பாக ஆக்கேலாவுக்கு வாய்மொழி மூலம் அறிக்கையிடுதல்.

**11. நடித்தல்**

மிருகமொன்று நடக்கும் விதம் அல்லது கதையொன்றை ஆக்கேலாவின் முன் நடித்துக் காட்டுதல். உ+ம்- முயலின் பாய்தல் முறை, தமிழ் நாட்டுப்புறக் கதையொன்றை நடித்து காட்டுதல், கழுகு வேகமாக பறக்கும் விதம்.

**12. பந்தை வீசுதல் மற்றும் பிடித்தல்**

பந்தை வீசுதல் மற்றும் பிடித்தல் போன்ற செயற்பாடுகளுடனான விளையாட்டொன்றில் ஏனைய குருளைச் சாரணர்களுடன் ஈடுபடுதல்.

**13. கயிறு பாய்தல்**

ஒரு இடத்திலிருந்து முன்னோக்கி 15 முறையும் பின்னோக்கி 05 முறையும் கயிறு பாய்தல்.

14. தவளை பாய்தல்

தனது உயரத்திற்கு சம உயரத்தில் உள்ள குருளைச் சாரணர் ஒருவருடன் சரியாக தவளை பாய்தல்.

**15. நற் சுகாதார பழக்கங்கள்**

நற் சுகாதார பழக்க வழக்கங்களை பிறிசில் போர்ட் ஒன்றில் எழுதி பாட சாலையில் காட்சிப்படுத்துதல் மற்றும் சுகாதார விழிப்புணர்வுப் பேரணி ஒன்றை நடாத்துதல்.

**16. குடும்ப விபரங்கள்**

வீட்டு முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தையும், குடும்பத்தின் விபரங்களையும் தனது விபரங்களையும் ஆக்கேலாவுக்கு வாய்மொழி மூலம் கூறத் தெரிந்திருத்தல்.

**17. பாதுகாப்பாக வீதியில் செல்லுதல்**

வீதியில் பாதுகாப்பாக செல்லுதல் மற்றும் வீதியை கடக்க அறிந்திருத்தல். அது தொடர்பாக சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆக்கேலாவுக்கு முன்வைத்தல்.

## 18. உணவு பரிமாறுதல்

அறுவராக ஆக்கேலாவின் ஒத்துழைப்புடன் சென்விச்/பழக்கலவை/பழச்சாறு செய்து பரிமாறுதல்.

## 19. சாரணர் பாடல்கள்

அறுவராக விரும்பிய 02 சாரணர் பாடல்களைப் பாடுதல்.

## 20. கட்டளைகள்

இதுவரை அறிந்திருந்த பின்வரும் கட்டளைகளை மேலும் மேம்படுத்துதல்.

I. நிமிர்ந்து நில், இலகுவாக நில்
II. இடது பக்கமாக திரும்புதல்
III. வலது பக்கமாக திரும்புதல்
IV. பின் திரும்புதல்
V. கலைந்து செல்லுதல்

## 21. வனக்கதை

மௌக்லி மந்தையில் இணைந்து கொள்வது முதல் "கா" வினால் (மலைப் பாம்பு) மௌக்லி விடுவிக்கும் வரை வனக்கதையை அறிந்திருத்தல்.

## 22. தீங்கிலிருந்து பாதுகாப்பு

இறுதி பக்கத்தில் உள்ள தீங்கிலிருந்து பாதுகாப்பு பட்டியலில் வெண்கலத் தாரகைக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்யவும்.

## 23. ஆறுமாத சேவை

அங்கத்துவ சின்னத்தை வென்ற பின்னர் ஆறுமாத கால சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

## 01. கட்டாய தகுதிகாண் சின்னங்கள்

புத்தக வாசகர் அல்லது ஓவியர்

குருளைச் சாரணரின் வயது 7 வருடங்கள் 8 மாதங்கள் முடிவடைந்த பின்னரும் 11 வயது பூர்த்தியாவதற்கு முன்னரும் இத் தாரகையினை சித்தியடைய வேண்டும்.

மேலும் கட்டாய சின்னங்களுக்குப் பிறகு பின்வரும் தகுதிகாண் சின்னங்களிலிருந்து இன்னும் நான்கு சின்னங்களை வெற்றி பெற முடியும். இசைக் கலைஞர்/ மகிழ்ச்சிஊட்டுபவர்/சேகரிப்பாளர்/துவிச்சக்கரவண்டி ஓட்டுனர்/ மெய்வல்லுநர்.

குருளைச் சாரணர் இத்தகைமைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததாகவும் வெண்கலத்தாரகை வெல்ல தகுதி பெற்றுள்ளதாகவும் குருளைச் சாரணர் ஆக்கேலாவால் பரிந்துரைக்கப்படுவார்.

# வெள்ளித் தாரகை

## வெள்ளித் தாரகைக்கான தகைமைகள்
## 8 வயது 2 மாதங்கள் முதல் 11 வயது வரை

1. **சேமிப்புக் கணக்கு**
   வெண்கலத்தாரகை வரை சேமித்த பணத்தை வங்கி சேமிப்புக் கணக்கொன்றில் வைப்பிலிடுதல் (அவ்வாறு கணக்கொன்று இல்லாவிடில் புதிய கணக்கொன்றை ஆரம்பித்தல். இந்த தகைமையை பூர்த்தி செய்வதன் மூலம் குருளைச் சாரணர் சிறு சேமிப்பாளர் சின்னத்தை வெல்ல முடியும்.)

2. **சமயங்கள் சார்ந்த பணிகள்**
   தனது சமயத்திற்குரிய விஷேட நிகழ்ச்சிக்களில் பங்கேற்றல்.
   உ+தா- போயா தினத்தன்று சில் எடுத்தல். கிறிஸ்தவ தேவாலய வழிபாடுகளில் ஈடுபடுதல். கோவில்களில் பூஜைகளில் பங்குபற்றுதல். ரமழான் நோன்பு இருத்தல்.

3. **சிக்கனம் மற்றும் சீரான ஒழுங்கு**
   I. ஆடை
   குருளை மந்தை கூட்டத்தில் குருளைச் சாரணர் தனது பாடசாலை அல்லது சாரணர் சீருடையை சவர்க்காரமிட்டு கழுவி உலர விடவும்.
   II. புத்தகங்கள்
   குருளைச் சாரணர் பாடசாலையில் பயன்படுத்தும் தனது புத்தகங்கள் மற்றும் பாடசாலை புத்தகப் பையை உரிய முறையில் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளல்.
   III. புத்தக உறைகள் போடுதல் மற்றும் புத்தக பக்க அடையாளப்படுத் தல்களை (Bookmark) தயாரித்தல்.

4. **பொத்தான் தைத்தல்**
   ஊசியில் நூலைக் கோர்த்து குறைந்தபட்சம் 02 துளைகளுள்ள பொத்தான் ஒன்றை சிறு துணியொன்றில் தைத்தல்.

5. **வாழ்த்துகள்**
   - பல்வேறு சந்தர்ப்பங்களில் வாழ்துக்கள் தெரிவிக்க அறிந்திருத்தல். உ+ம் - காலை வணக்கம், இரவு வணக்கம்,
   - அனைத்து குருளைச் சாரணர்களும் மந்தைக் கூட்டத்தின் போது தனித்தனியாக வாழ்த்து அட்டைகளை தயாரித்தல். உ+ம் பிறந்தநாள், வெசாக், பொங்கல், நத்தார் ஈத் முபாரக் வாழ்த்து அட்டைகள்.

6. **மதித்தல்**
முதியவர்களை மதிப்பதற்கு அறிந்திருத்தல் வேண்டும்.

7. **துணிக்கட்டு**
துணிக்கட்டு மற்றும் அதன் பயன்களை அறிந்திருத்தல்.

8. **தேநீர் தயாரித்தல்**
அறுவராக தேநீர் தயாரித்து சரியான உபசரிப்பு முறைக்கமைய வழங்குதல்.

9. **பயணம்**
தனது மந்தையுடன் பாடசாலைக்கு அருகிலுள்ள விஷேடமான இடமொன்றை பார்வையிட செல்லுதல். உ+ம்- பொலிஸ் நிலையம், தபாலகம், பூங்கா போன்ற இடங்களை பார்வையிட செல்லுதல். அவ் இடங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆக்கேலாவுக்கு அறிக்கையிடுதல்.

10. **தேசியக் கொடி**
தேசியக் கொடியில் உள்ள நிறங்கள், சின்னங்கள் குறித்து அறிந்திருத் தல் மற்றும் உயர்த்தும் போது நிமிர்ந்து நிற்பதற்கு அறிந்திருத்தல்.

11. **அவதானித்தல் (மரங்கள் மற்றும் மிருகங்கள்)**
03 மர வகைகள் 03 மிருகங்களை அவதானித்து அதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக ஆக்கேலாவிடம் வாய்மொழி அறிக்கையிடல்.

12. **படைப்பு**
கழிவுகளை அல்லது இயற்கை பொருட்களை பயன்படுத்தி அன்றாட வாழ்க்கைக்கு பயனுள்ளவற்றை உருவாக்குதல்.

13. **கிராமியப் பாடல்கள்**
தனது மந்தையுடன் சேர்ந்து 02 கிராமியப் பாடல்களை பாடுதல்.

14. **சிறந்த பண்புடையவர்**
அறுவராக சிறந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர் பற்றி நடித்துக் காட்டல்.
உ+ம் - மத்துமபண்டார, வீரபுரன் அப்பு, சேர்.பொன்னம்பலம் இராமநாதன், டி.எஸ்.சேனாநாயக்க, டி.பி.ஜாயா

15. **தடைகளுடனான பயணம்**
தடைகளுடனான செயற்பாடுகளை செய்வித்தல். உ+ம் டயர்களுக்குள்ளால் நுழைந்து செல்லுதல், தடைகளுக்கு உள்ளால் ஊர்ந்து செல்லுதல், கதிரைக்குக் கீழால் ஊர்ந்து செல்லுதல்.

**16. துடிநிலை**

அணிவகுப்பு மற்றும் முன்னோக்கி செல்லுதல்.

**17. நாடகத்தில் பாடலொன்றுக்கு நடித்தல்**

அறுவராக நாடகத்தில் ஒரு பாடலொன்றுக்கு நடித்துக் கொண்டு பாடுதல்

**18. பாய்ந்து கரணமடித்தல்**

இரண்டு முறை குத்துக்கரணமடித்தல் அல்லது கரணமடித்தல்.

**19. சமநிலை**

குறித்த எடையுள்ள புத்தகம் அல்லது பேப்பரால் சுற்றப்பட்ட கல்லொன்றை (ஆக்கேலா பாரத்தை தெரிவு செய்வார்) தலைக்கு மேல் வைத்துக் கொண்டு 6 மீட்டர் தூரம் வரை செல்ல வேண்டும்.

**20. வெளிநாட்டு சாரணர் பாடலொன்று அல்லது வெற்றிக்கோஷம்**

வெளிநாட்டு சாரணர் பாடலொன்றையும் வெற்றிக் கோஷமொன்றையும் அறுவராக அல்லது மந்தையாக முன்வைத்தல்.

**21. வனக்கதை**

“கா” மௌக்லியை விடுவித்தது முதல் சியோனி காட்டுக்கு சிவப்பு பூவை கொண்டு வரும் வரையிலான வனக்கதையை அறிந்திருத்தல்.

**22. மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான செயற்பாடுகள்**

மாவட்ட குருளைச் சாரணர் பேரணியில் பங்குபற்றுதல், குருளைச் சாரணர் தினத்தில் அல்லது கபோரியில் பங்குபற்றுதல்.

**23. தீங்கிலிருந்து பாதுகாப்பு**

இறுதி பக்கத்தில் உள்ள தீங்கிலிருந்து பாதுகாப்பு பட்டியலில் வெள்ளித் தாரகைக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்யவும்.

**24. வெண்கலத் தாரகைக்கு பிறகு 06 மாதசேவைக் காலத்தை பூர்த்தி செய்தல்**

வயது 8 வருடங்கள் 2 மாதங்கள் முடிவடைந்த பின்னரும் 11 வயது பூர்த்தியாவதற்கு முன்னரும் வெள்ளித்தாரகையை சித்தியடைய வேண்டும்.
வீட்டுப் பணியாளர் மற்றும் தோட்டக்காரர் கட்டாய தகுதிகாண் சின்னங்களை வெற்றி பெறுவது கட்டாயமாகும்.

முதலுதவியாளர், வழிகாட்டி, மகிழ்ச்சிகரமான குடும்பம் அல்லது சர்வதேச பிரிவு சின்னங்கள் தவிர மேலும் 6 சின்னங்களை விரும்பினால் வெற்றிபெற வேண்டும்.

குருளைச் சாரணர் இத் தகைமைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததாக உறுதிப்படுத்தி வெள்ளித்தாரகைக்காக ஆக்கேலா பரிந்துரை செய்வார்.

# தங்கத் தாரகை

## தங்கத் தாரகைக்கான தகைமைகள்
## 9 வயது 6 மாதம் முதல் 11 வயது வரை

**01. குருளைச் சாரணர் தியானம்**

குருளைச் சாரணர் தலைவரால் தனது மந்தைக்காக ஒழுங்கமைத்த அனைத்து சமயங்களுக்குரிய நிகழ்ச்சியொன்றில் மந்தையுடன் பங்குபற்றல்.

**02. வெளிக்களப் புத்தகம்**

10 இலைகள் மற்றும் பூக்களை படியவைத்து (Press செய்து) (மந்தைக் கூட்டத்தின்போது) வெளிக்களப் புத்தகமொன்றிலோ (Scrap) அல்லது கறுப்பு வரைதல் புத்தகத்திலோ அல்லது பயன்படுத்தப்பட்ட புத்தகமொன்றிலோ ஒட்டிப் பெயரிடுதல்.

**03. மகிழ்ச்சிகரமான சேவை**

பாடசாலைக்கு அருகில் உள்ள விசேடமான இடமொன்றுக்குச் சென்று மகிழ்ச்சிகரமான சேவையொன்றை செய்தல். (01 மணித்தியாலம்) உ+தா - சமய தலமொன்றிலோ அல்லது பொது இடமொன்றிலோ தேவையொன்றை நிறைவேற்றுதல்.

**04. ஒரு வளையமும் இரு ஒற்றைக் குழைச்சுகளும்**

ஒரு வளையமும் இரு ஒற்றைக் குழைச்சு முடிச்சை சரியாகக் கற்றுக் கொள்ளுதல் மற்றும் அதன் பயன்களை அறிந்து கொள்ளல்.

**05. முளைத்தும்புக் குழைச்சு**

முளைத்தும்புக் குழைச்சு சரியாக கற்றுக் கொள்ளுதல் மற்றும் அதன் பயன்களை அறிந்து கொள்ளல்.

**06. உணவு சமைத்தல்**

வற்றாளைக் கிழங்கு அல்லது மரவள்ளிக்கிழங்கு அல்லது ஈரப்பலா அல்லது பலாக்காய் அல்லது கடலையை அவித்துப் பரிமாறுதல்.

**07. ஆடைகளை அழுத்துதல்**

மந்தைக் கூட்டத்தின் போது பெரியவர் ஒருவரின் மேற்பார்வையில் மேற் சட்டை அல்லது கவுனொன்றை அழுத்துதல்.

Lorem Ipsum

**08. புலன்பயிற்சி விளையாடடுகள்**

ஆக்கேலாவினால் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுகளில் பங்குபற்றுதல்.
03 உடற் பயிற்சி.

**09. பாதயாத்திரை மற்றும் புதையலை தேடுதல்**

ஆக்கேலாவினால் ஒழுங்கமைக்கப்பட்ட அரை நாட்கள் எல்லைக்கு உட்பட்ட பாதயாத்திரையொன்றில் அல்லது புதையல் தேடும் விளையாட்டொன்றில் அறுவராக பங்குபற்றுதல்.

**10. விளம்பரங்கள்**

குழந்தைகளுக்குப் பொருத்தமான சாதகமாக விளம்பரம் ஒன்றைத் தயாரித்து அதனை செய்து காட்டுதல்.

**11. இயற்கைப் படங்கள்**

இயற்கையை கருப்பொருளாகக் கொண்டு படம் ஒன்றை வரையவும்.
உ+ம்- மரம், கடற்கரை, மலை, வயல், பூஞ்சோலை

**12. சிறுவர் நாடகமொன்றை நடித்தல்**

தனது அறுவர்களுடன் ஆக்கேலாவினால் வழங்கப்படும் தலைப்பின் கீழ் நாடகமொன்றை நடித்துக் காட்டுதல்

**13. மரத்தில் அல்லது கயிற்றில் ஏறுதல்**

மரத்தில் அல்லது கயிற்றில் 02 மீட்டர்கள் வரை ஏறக்கூடியவராக இருத்தல்.

**14. முதலுதவி**

சிறு காயங்களுக்கு மருந்து கட்டுவதற்குத் தேவையான 6 பொருட்களை தயார் செய்தல் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிதல்.

**15. பணிகளை அறிந்து கொள்ளல்**

நண்பருடன் பின்வரும் இடங்களில் இரண்டு இடங்களைப் பார்வையிடச் செல்லுதல் மற்றும் அவர் கற்றுக் கொண்டவற்றால் நிறைவேற்றப்படும் பணிகளை ஆக்கேலாவுக்கு முன்வைத்தல்.

I. பொது நூலகம்
II. தொல்பொருள் அருங்காட்சியகம்
III. மிருகக் காட்சிச்சாலை
IV. பல்பொருள் அங்காடி
V. கிராமிய சந்தை
VI. பண்ணை
VII. மர வேலைத்தளம்
VIII. தச்சு வேலைத்தளம்

IX. தபாலகம்
X. துறைமுகம்
XI. நீச்சல் தடாகம்
XII. தேயிலைத் தொழிற்சாலை

## 16. சிவப்பு பூ

ஆக்கேலாவினால் ஒழுங்கமைக்கப்பட்ட சிவப்பு பூ நிகழ்ச்சியொன்றில் செயலூக்கத்துடன் பங்குபற்றல்.

## 17. வெற்றிக் கோஷம்

03 வெற்றிக் கோஷங்களையும் தனியாக முன்வைக்கக் கூடிய ஆற்றல் இருக்க வேண்டும்.

## 18. சாரணர் இயக்கத்தின் நிறுவுனர் - பீ.பி அவர்கள்

பீ.பி. அவர்களைப் பற்றிய பின்வரும் விடயங்களை அறிந்திருத்தல்

- பீ.பி. அவர்களின் தாய் நாடு
- பீ.பி. அவர்களின் பிறந்த நாள்
- குருளைச் சாரணர் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட வருடம்
- பீ.பி. அவர்கள் இறந்த நாடு
- முதலாவது சாரணர் பாசறை

## 19. குருளை விடுமுறை பாசறை

தனது மந்தையுடன் குருளைச் சாரணர் விடுமுறைப் பாசறையொன்றில் பங்குபற்றல். (ஒரு இரவு தங்கியிருந்து)

## 20. வனக்கதை

சிவப்பு பூவை சீயோனி வனத்திற்கு கொண்டு வந்ததன் பின்னர் புலியின் தோலைக் கொண்டு வருவது வரை அறிந்திருத்தல்.

## 21. தீங்கிலிருந்து பாதுகாப்பு

இறுதி பக்கத்தில் உள்ள தீங்கிலிருந்து பாதுகாப்பு பட்டியலில் தங்கத் தாரகைக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்யவும்.

## 22. ஆறு மாதகால சேவை

வெள்ளித்தாரகைச் சின்னத்தை சித்தியடைந்த பின் 06 மாத காலத்திற்கு சேவை செய்திருத்தல் வேண்டும்.

- மூன்று கட்டாய தகுதிகாண் சின்னங்களை வெற்றி கொள்வது அவசியம். மகிழ்ச்சிகரமான குடும்பம், வழிகாட்டி மற்றும் முதலுதவியாளர் தகுதிகாண் சின்னம் அல்லது வேறு ஒரு சர்வதேச தகுதிகாண் சின்னம்.

தங்கத் தாரகையை 9 வயது 6 மாதங்களுக்குப் பின்னர் மற்றும் 11 வயதிற்கு முன்னர் வெற்றி பெற முடியும்.

தங்கத் தாரகைக்கான தகுதிகாண் சின்னங்களைப் பெற்ற பிறகு குருளைச் சாரணர்கள் மேலும் 08 சின்னங்களை வெற்றி பெறலாம்.

தங்கத்தாரகை சின்னத்தை வெற்றி பெற்ற பின்னர் மீதமுள்ள அனைத்து தகுதிகாண் சின்னங்களையும் விரும்பினால் வெற்றி பெறலாம்.

தனது மாவட்டத்தின் உதவி மாவட்ட ஆணையாளருடன் (குருளைச் சாரணர்) நடைபெறும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் இத்தாரகையை வெற்றி பெறுவதற்கான தகைமையைப் பெறுவீர்கள்.

நேர்முகப்பரீட்சைக்கு பிரத்தியேக குறிப்புப் புத்தகம் (LOG BOOK) அவசியம் இல்லை. குருளை சாரணருக்கான தேசிய நிகழ்ச்சிப் பிரிவினால் தயாரிக்கப்படும் அங்கத்துவ, வெண்கல, வெள்ளி, தங்கத் தாரகைக்கான செயற்பாட்டுப் புத்தகத்தைப் பயன்படுத்த வேண்டும்.


## குருளை சாரணர் தகுதிகாண் சின்னம்

தகுதிகாண் சின்னத்திற்கான பாடவிதானங்களை சாரணர் தலைமையக விற்பனைக்கூடத்தில் பெற்றுக் கொள்ளலாம். தகுதிகாண் சின்னங்களை வெற்றிகொள்ள முயற்சிப்பதற்கு முன்னர் சின்னத்திற்கான் தேவைகள் குறித்து அறிந்திருக்க வேண்டியது அவசியம். சின்னத்திற்கான பரீட்சகரை சந்திக்கும் போது குருளைச் சாரணர் கீழ்க் குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. குருளைச் சாரணர் சீருடை அணிந்திருக்க வேண்டும்.
2. செயற்பாட்டுப் புத்தகத்தில் சின்னத்திற்கான பாடவிதானங்களை எழுதியிருக்க வேண்டும்.
3. சின்னத்திற்கான பாடவிதானம் குறித்து சிறந்த அறிவு இருக்க வேண்டும்.

# தீங்கிலிருந்து பாதுகாப்பு

| | அங்கத்துவம் | வெண்கலம் | வெள்ளி | தங்கம் |
|---|---|---|---|---|
| தன்னைப் பற்றியும் சமூகத்தை பற்றியதுமான விழிப்புணர்வு | தனது பெயர் மற்றும் அவசர நிலைமைகளின் போது தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்களை அறிந்திருத்தல். | தனது முகவரியை அறிந்திருத்தல். | தனது பெற்றோரின் பெயர்களை அறிந்திருத்தல். | தனது பெற்றோரின் தொலைபேசி இலக்கங்களை அறிந்திருத்தல். |
| இளம் நபர்களுக்கு இடையேயான தொடர்பு | தனது அறுவருடன் நட்பாக இருத்தல் | நட்பின் முக்கியத்துவம் | சிறந்த நண்பராக இருக்கும் விதம் | மோசமான நண்பனை இனங்காணும் விதம் |
| இனந்தெரியாத நபர்கள் அழைக்கும் போது அவர்களுடன் செல்லாதிருத்தல் | ஆகேலாவுடனான சிறந்த தொடர்பு | நம்பிக்கையான பெரியவர்களுடன் மாத்திரம் பழகுதல். | ஆகேலா, வீடு பாடசாலை ஆகியவற்றிடையே தொடர்பொன்றை ஏற்படுத்திக் கொள்ளல். | ஆகேலாவுடன் பிரச்சினைகள், திட்டங்கள் குறித்து கலந்துரையாடுதல். |
| | | | | |
| உடற் பாதுகாப்பு | தனிமையில் இருக்காதிருத்தல் மற்றும் அறியாதவர்களுடன் உரையாடாதிருத்தல் | நல்ல மற்றும் தீய தொடுகைகளை இனங்கண்டு தீய தொடுகைகளைத் தவிர்த்தல் | இனந்தெரியாத நபர்களோடு கதைக்காமல் இருத்தல் | உடல் துன்புறுத்தல்களை இனங்கண்டு கொள்ளுதல். அவ்வாறானவை நடைபெறும்போது ஆகேலாவுக்கு அறியத் தருதல். |
| உணர்ச்சி ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு | தான் விரும்பாத ஒரு விடயம் நடைபெறும்போது அது தனது பிழையால் நிகழ்ந்த ஒன்றல்ல என்பதை உணர்ந்து கொள்ளல். | | உடல் ஆரோக்கியத்தை சிறந்த விதத்தில் தக்க வைத்துக் கொள்ளல். | ஏனையவர்களுடனான ஆரோக்கியமான தொடர்பு |
| உளவியல் பாதுகாப்பு | நன்றாக விளங்கிக் கொள்ள கேள்விகள் கேட்டல் | சந்தேகங்களின்றி விளங்கிக் கொள்ளல். | தவறுகளின் மூலம் பாடம் கற்றுக் கொள்ளல். | தானாக தானாகவே இருத்தல். |
| இடங்களையும் உபகரணங்களையும் பாதுகாப்பாக பயன்படுத்தல் | அசாதாரணமான ஏதேனுமொன்றைக் கண்டால் ஆகேலாவிடம் கூறுதல். | வீட்டு விபத்துகளைத் தவிர்த்தல் | கூட்டம் நடைபெறும் இடத்தின் பாதுகாப்பு | மின் மற்றும் தீ விபத்துகளிலிருந்து பாதுகாப்பு |
| ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்தல் | நிறைய தண்ணீர் அருந்துதல், ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் பல் துலக்குதல். | போஷாக்கான உணவை உட்கொள்ளுதல் | சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்கள் இரண்டினை அறிந்திருத்தல். | சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்கள் நான்கினை அறிந்திருத்தல். |
| இணைய பாதுகாப்பு | இணையத்தை பெரியவர்களின் அனுமதியோடு பயன்படுத்தல் | | இணையத்தில் உள்ள நல்லவற்றை மாத்திரம் தேர்ந்தெடுக்கவும், மோசமானவை நிறைய இருப்பதையும் விளங்கிக் கொள்ளல். | |
| தகவல் பாதுகாப்பு | தனது தனிப்பட்ட தகவல்களை ஏனையவருடன் பகிர்ந்து கொள்ளாதிருத்தல். | | | |
| தனிநபர் நேர்மை | மற்றவர்களிடம் நேர்மையாக இருப்பதுடன் நீங்கள் நேர்மையாக இருப்பதன் மூலம் உங்களிடமிருந்து சிறந்த குணநலன்கள் வெளிப்படும். | | | |



உடல்சார்ந்த
பச்சை நிற சுற்று
மெய்வல்லுனர்
துவிச்சக்கரவண்டி ஓட்டுனர்
விளையாட்டு வீரர்
நீச்சல் வீரர்
வேலைக்காரர்
கலாசாரம் சார்ந்த
செம் மஞ்சல் நிற சுற்று
ஓவியர்
கிராமிய நடனமாடுபவர்
அறிவுசார்ந்த
நீல நிற சுற்று
புத்தக வாசிப்பாளர்
அவதானிப்பாளர்
விஞ்ஞானி
கணினி அறிவு
ஆறு கல்வி நோக்கங்களின் கீழான தகுதிகாண் சின்னங்கள்
ஆன்மீகம் சார்ந்த
வெண்கல நிற சுற்று
மகிழ்ச்சிகரமான குடும்பம்
சமயம்
உணர்வு சார்ந்த
ஊதா நிற சுற்று
இசைக்கலைஞர்
மகிழ்ச்சியூட்டுபவர்
சேகரிப்பாளர்
கைவினையாளர்
சமூகம் சார்ந்த
சிவப்பு நிற சுற்று
சர்வதேசம்
இயற்கை சவாலுக்கான வெற்றியாளர்
சாரணர் சூரிய சவால்
சமாதானத் தூதுவர்கள்
பிளாஸ்டிக் வெறுப்பாளர் சவால்
அமைதிக்கான உரையாடல்
தொடர்பாளர்
முதலுதவியாளர்
வழிகாட்டுநர்
சிறு சேமிப்பாளர்
நுகர்வோர்
தோட்டக்காரர்
நட்பு
வீட்டுப்பணியாளர்

# குருளை சாரணர் தகுதிகாண் சின்னம்


## உடலியல் பிரிவு




## அறிவுசார்ந்த பிரிவு





## உணர்வுசார்ந்த பிரிவு





## சமூகம் சார்ந்த பிரிவு




## ஆன்மீகம் சார்ந்த பிரிவு




## கலாசாரம் சார்ந்த பிரிவு



# சர்வதேச தகுதிகாண் சின்னம்

## இயற்கை சவாலுக்கான வெற்றியாளர்கள்



## சாரணர் சூரிய சவால்




## சமாதானத் தூதுவர்கள்




## பிளாஸ்டிக் வெறுப்பாளர் சவால்




## அமைதிக்கான உரையாடல்



# சாரணர்
# வாக்குறுதி மற்றும் விதி

என்னால் கூடுமான வரை
எனது சமயத்துக்கும், தேசத்திற்கும் எனது கடமைகளைச் செய்வேன்
என்றும் - எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும்,
சாரணர் விதிகளுக்கு அமைந்து, பணிந்து நடப்பேன் என்றும்
எனது கௌரவத்தின் மீது நான் வாக்குறுதியளிக்கின்றேன்.

## சாரணர் விதி

1. சாரணன் நம்பத் தகுந்தவன்.
2. சாரணன் பற்றுறுதி உடையவன்.
3. சாரணன் நேசமும் மரியாதையும் உடையவன்.
4. சாரணன் மற்றெந்தச் சாரணனுக்கும் சகோதரன்.
5. சாரணன் தைரியம் உடையவன்.
6. சாரணன் விலங்குகள் மீது அன்பு உடையவன்.
7. சாரணன் ஒத்துழைப்பவன்.
8. சாரணன் மன மகிழ்ச்சி உடையவன்.
9. சாரணன் சிக்கனமானவன்.
10. சாரணன் சிந்தனை, சொல், செயலில் தூய்மையானவன்.

65/9,Sir Chittampalam A Gardiner Mawatha,Colombo 02.
Tel : 0115731050 / 0113231512 / 0112433131
e-mail :slscout1@yahoo.com / srilankascout@ymail.com
Web : www.scout.lk